# 5

# யாத்திரைக்காலம், கி.மு. 1491–1451

### *வெளியேற்றத்திலிருந்து யோர்தானைக் கடந்தது வரை*
### *யாத். 15-40; லேவி., எண்., உபா.*

## I. செங்கடலில் இருந்து சீனாய் (மலை) வரை. *(யாத். 15-18.)*

*1.* **விடுதலையின் பாடல்** (யாத். 15).—செங்கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரவேலரின் உணர்வெழுச்சிகள் சுலபமாய் விவரிக்கப்படாதவைகளாக அல்லது உணரப்படாதவைகளாகவும் உள்ளன. தாழ்மையானதும், இருப்பினும் வெற்றி முழுக்கமிடுவதுமான நன்றியுணர்வே அங்கு மேலோங்கியிருந்த உணர்வாக இருந்திருக்க வேண்டும். பெருமைக்கு அங்கு இடமில்லாதிருந்தது. அவர்களின் அழிவானது அவ்வளவு உச்ச அளவாயிருந்திருந்தது, அவர்களின் விடுதலையானது அவ்வளவு முழுமையானதாக இருந்தது மற்றும் அது விடுதலையின் நினைவுச் சின்னமாக நமக்கு வந்துள்ள சிறப்புமிக்க பாடலில்/கவிதையில் யெகோவாவின் துதியே அன்றி வேறெதுவும் கேட்கப்படாத அளவுக்கு மிக முழுமையானதாக இருந்தது.[1]

*2.* **ரெவிதீமில் அணிவகுத்துச் செல்லுதல்.**—வெற்றியின் காட்சியிலேயே இஸ்ரவேலர்கள் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கக் கூடாதிருந்தது. இன ஒருங்கமைப்பானது சீனாய்(மலை)யில் நிறைவு பெற வேண்டியதாக இருந்தது. அங்கிருந்து கடலின் கிழக்குக் கரை வழியாகவே தூரத்தில் உள்ள வெளிப்பகுதிகள் சிலவற்றுக்கு வழி அமைந்திருந்தது; வடபகுதியில் இருந்த மாகாணம்/மாவட்டம் “சூர்வனாந்திரம்” என்றும், தென்பகுதியில் இருந்த மாவட்டம் “சீன் வனாந்திரம்” என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மாராவின் தண்ணீர்கள் மதுரமானதும், பன்னிரெண்டு ஊற்றுக்களும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்த ஏலீம் என்னுமிடத்தில் பாளையம் இறங்கியதும் அந்த அணிவகுப்பின் தொடக்க கால நிகழ்ச்சிகளாய் இருந்தன. (எகிப்திலிருந்து) கடந்து வந்து ஒரு மாதம் ஆகியிருந்தது. அவர்கள் பெருந்திகிலூட்டும் சீன் வனாந்தரத்திற்கு வந்து சேருகின்றனர். எகிப்திலிருந்து கொண்டு வந்த உணவு தீரத் தொடங்குகின்றது, மற்றும் பசியின் கொடுமையுடன் தாகத்தின் தாக்கமும் கூடிக் கொண்டது. கடந்த கால விடுதலையையும்

தேவனுடைய நிச்சயமான வாக்குத்தத்தங்களையும் மறந்த அம்மக்கள், தங்களை இறந்து போகச் செய்வதற்காக வனாந்திரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்ததாக மோசேயின்மீது கசப்புமிக்க பழி தூற்றுகின்றனர். இப்பொழுது இரக்கத்தின் அற்புதமான மன்னா (பொழிதல்) தொடங்கு கிறது, இது அவர்கள் அலைந்து திரிந்த நாற்பது ஆண்டுகள் காலமும் நாள்தோறும் அவர்களைப் பின் தொடர்ந்தது, இதையே இயேசு தம்மைப் பற்றி வானத்திலிருந்து வந்த அப்பம் என்று கூறுகையில் வனப்பு மிக்க அடையாளமாகப் பயன்படுத்துகின்றார்.

***3. ரெவிதீமில் பாளையம் இறங்குதல்.***—இப்பொழுது இஸ்ரவேலர் சீன் வனாந்திரத்தின் தீப்பறக்கும் சமவெளியிலிருந்து ரெவிதீமின் பள்ளத் தாக்கிற்கு வந்து பாளையம் இறங்கினர். அவர்கள் ஒரேப் என்று அறியப் பட்ட மலைகள் நிறைந்த மாகாணத்திற்குள் வந்து நுழைந்தனர். இங்கு அவர்கள் மீண்டும் தண்ணீரின்றிப் பாடநுபவித்தனர். மோசே கன்மலையை அடிக்கவே, அதில் இருந்து தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. இங்கு அமலேக்கியர்கள், எதிர்பாராத வகையில் தூண்டுதலில்லாமலேயே தீவிரமாய் (இஸ்ரவேலர்களை) தாக்கும் செயலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலானது யோசுவாவின் தலைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களைக் கொண்டு எதிர்த்து நிற்கப்பட்டது, அவ்வேளையில் ஆரோனும், ஊர் என்பவரும் மோசேயின் கரங்களைத் தாங்கிப் பிடித்து அவர் ஜெபம் செய்ய உதவினார்கள். இங்கு மோசே தம் குடும்பத்துடன் இணைந்து கொள்ளுதலும் நடைபெற்றது, அவர்கள் மாபெரும் போட்டி மற்றும் (எகிப்திலிருந்து) கடந்து வருதல் ஆகியவற்றின் போது எத்திரோவு டன் தங்கியிருந்திருந்தனர். நியாயம் விசாரித்தலைச் செயல்படுத்துதல் பற்றி மதிப்புமிக்க ஆலோசனைகளை எத்திரோ மோசேக்கு அளித்து உதவி செய்தார்.

## II. *சீனா(ய் மலை)யில் (தங்கி) இருந்த ஆண்டு.*

மோசே இஸ்ரவேலரை ரெவிதீமில் இருந்து சீனாய் மலைக்கு வழிநடத்திச் சென்றார். ஆழமான அசுத்தக்குவியல்களினூடே அணுகிச் சென்றது என்பது அவர்களைப் பயபக்தியினால் நிறைக்கச் செய்யும்படி நன்கு கணக்கிடப்பட்டிருந்தது. கடைசியில் அவர்கள் ஆயிரத்து ஐந்நூறு அடி உயரத்திற்கு ஒரு மாபெரும் கருங்கல் பலிபீடம் போல் திடீரென உயர்ந்து நின்ற பரிசுத்த மலையின் முன்பாக இருந்த சமவெளிப் பரப்பொன்றில் பாளையமிறங்கினர்.

***1. இனத்திற்கான உடன்படிக்கை*** *(யாத். 19; 20).*—முற்பிதாக்களில் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டதும், மிக சமீபத்தில், மோசேக்கு எரியும் புதரில் புதுப்பிக்கப்பட்டதுமான ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை யானது இவ்விடத்தில் ஒரு இனத்திற்கான உடன்படிக்கையாக பயபக்தி யான முறைப்படி புதுப்பிக்கப்பட்டு, விரிவாக்கப்படுகின்றது. ஆபிரகாமை அழைத்து, முற்பிதாக்கள் மீது அக்கறை செலுத்தியவர்; எகிப்திலே தமது மக்களின் கூக்குரல்களைக் கேட்டு அவர்களை அடிமைத்தனத்திலிருந்து

மீட்டவர்; அவர்களின் பயணத்தில் அதுவரை அவர்களை வழிநடத்தி, அவர்களுக்கு உணவூட்டி வந்தவர், இப்பொழுது அவர்களைத் தம்முடன் தனிப்பட்ட வகையிலான உடன்படிக்கை உறவுகளில் சேர்த்துக் கொள்வதற் கான ஒரு திட்டத்தை முன் மொழிகின்றார். மோசேயின் மூலமாக தேவனால் முன்வந்து அளிக்கப்பட்ட உடன்படிக்கையானது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டு, பலிகளினாலும் இரத்தம் தெளிப்பினாலும் பரிசுத்தத்திற்கு ஏற்ற விதத்தில் உறுதிப்படுத்தப் பட்டது. இந்த உடன்படிக்கையானது பத்துக் கட்டளைகளாக விவரிக்கப் பட்டது, இது இடி முழக்கங்கள், மின்னல்கள் மற்றும் பூமியதிர்ச்சி ஆகிய வற்றின் மத்தியில் சீனாய் மலையின் மீது தொடக்கத்தில் உரைக்கப்பட்டது. பிற்பாடு அவைகள் தேவனால் கற்பலகைகளில் எழுதப்பட்டன. அவைகள் பின்வருமாறு:

(1) என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

(2) சொரூபத்தையாகிலும் விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

(3) உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

(4) ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

(5) உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.

(6) கொலை செய்யாதிருப்பாயாக.

(7) விபசாரம் செய்யாதிருப்பாயாக.

(8) களவு செய்யாதிருப்பாயாக.

(9) பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(10) இச்சியாதிருப்பாயாக.

ரோமாபுரியின் பன்னிரு பலகைகளுக்கு ஒரு ஆயிரம் ஆண்டுகள் முன்பாக, லைகர்கஸ்ஸின் சட்டங்களுக்கு ஐந்நூறு ஆண்டுகள் முன்பாக சீனாய் மலையில் தரப்பட்ட சட்டமானது இவ்வாறு மிகச் சிறந்த மேன்மையுடையதாயிருந்தது. பத்து கட்டளைகள், குடிமை மற்றும் சடங்காச்சாரச் சட்டங்களின் முழு அமைப்பாக மேலும் கூடுதலாக விரிவாக்கப்பட்டது.

***2. இன ஆசாரியத்துவம்.***—முற்பிதாக்களின் காலத்தில் குடும்பத் தலைவரே ஆசாரியராகச் செயல்பட்டார். (எகிப்திலிருந்து) கடந்து வந்த பிறகு, முழு இனமும், அதிலும் விசேஷமாக முதற்பிறந்த யாவரும் பரிசுத்தமானவர்களாகக் கருதப்பட்டனர் (யாத். 13:2, 11-15). பிற்பாடு, முதற்பேறானவர்களுக்கு மாற்றாக லேவியின் கோத்திரமானது ஆசாரியத் துவக் கோத்திரமாகப் பிரித்து வைக்கப்பட்டது (எண். 3:5-13). ஆரோனின் குடும்பம் ஆசாரியத்துவத்திற்குரியதாகப் பரிசுத்தப்படுத்தப்பட்டது, ஆரோனும் அவருக்குப் பின் அவரது மகன்களும்/சந்ததிகளும் என்றும் மாறாத் தொடர் நிலையில் யூத இனத்தின் மிக உயர்ந்த பணிப்பொறுப்பான

பிரதான ஆசாரியர் என்ற பொறுப்பை வகித்தனர்.

***3. இனப் பண்டிகைகள்.***—ஆண்டுப் பண்டிகைகள் மூன்று இருந்தன. அவை யாவையும் அவர்களின் இன வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சிகளின் நினைவுகூருதல்களாய் இருக்கையில், அறுவடைக் காலத்தின் வளர்நிலைப் படிகளில் ஆசரிக்கக் கூடிய அளவுக்கு கால அளவுக்குட்படுத்தப்பட்டன.

*அ. பஸ்கா, அல்லது புளிப்பில்லாத அப்பப் பண்டிகை,* இது (எகிப்திலிருந்து) கடந்து வந்த இரவில் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதின் நினைவுகூருதலாக இருந்தது; இது ஆபீப் 14-21(நமது நாட்காட்டியில் ஏப்ரல் முற்பகுதி)யில் ஆசரிக்கப்படுகையில், இது அறுவடையின் தொடக்கமாகவும் கொண்டாடப்பட்டது. பஸ்கா ஆட்டுக்குட்டி (சமைக்கப்பட்டு) புளிப்பில்லாத அப்பத்துடனும் கசப்பான கீரைகளுடனும் உண்ணப்பட்டதும், அறுவடையின் தேவனுக்கு நன்றி செலுத்துமுகமாக முதிர்ந்த தானியக் கதிர் அசைவாட்டப்படுதலும் இதன் முக்கிய அம்சங்களாயிருந்தன.

*ஆ. வாரங்களின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே.*—இது பஸ்காவுக்கு ஐம்பது நாட்கள் கழித்து நடைபெற்றது, மற்றும் தானிய அறுவடையின் முடிவில் கொண்டாடப்பட்டது. பிற்காலத்திய யூதர்கள் இப்பண்டிகையை, முதல் பஸ்காவிலிருந்து சுமார் ஐம்பது நாட்களுக்குப் பிறகு நடைபெற்ற நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதின் நினைவு கூருதலாகவும் கவனித்து மதித்தனர். (புதிதாய்ச்) சுட்ட அப்பத்தின் வடிவில் முதற்கனிகளின் காணிக்கையளித்தல் என்பதே இதன் மிக முக்கியமான பக்திக் கொண்டாட்டமாய் இருந்தது.

*இ. கூடாரங்களின் பண்டிகை அல்லது சேர்ப்பு கால பண்டிகை.*—இது ஏழாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலிருந்து இருபத்தியிரண்டாம் தேதி வரையிலும் ஆசரிக்க/கடைப்பிடிக்கப்பட்டது. இது ஒரு வகையான அறுப்புக்கால இல்லிடமாய் இருந்தது—இது கனிகளை/விளைச்சலை சேர்க்கும் ஒரு கொண்டாட்டமாய் இருந்தது. இது யூதர்களின் நன்றி செலுத்துதலாய் இருந்தது. வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் (தங்களின் முன்னோர்கள் வாழ்ந்த) கூடார வாழ்க்கையின் நினைவுகூருதலாக அவர்கள் (இப்பண்டிகையின் போது) மரக்கிளைகளினால் கட்டப்பட்ட கூடாரங்களில் ஒரு வார காலம் வாழ்ந்தனர்.

***4. இனப் புனித இடம்.***—*சீனா(ய் மலை)யில் இருந்த ஆண்டின் போது,* ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டது. இது பதினைந்து அடி அகலமும் நாற்பத்து ஐந்து அடி நீளமும் கொண்ட, தூக்கிச் செல்லக் கூடிய ஒரு ஆலயமாக இருந்தது. இதில் பதினைந்தடி அகலமும் முப்பதடி நீளமும் கொண்ட "பரிசுத்த ஸ்தலத்தில்" தூபபீடமும், தேவ சமூகத்து அப்ப மேஜையும், ஏழு கிளைகளுடைய குத்து விளக்கும் இருந்தன, இவை யாவும் (சாத்தப்) பொன்னினால் செய்யப்பட்டிருந்தன. பதினைந்துக்குப் பதினைந்து சதுர அடி கொண்ட "மகாப் பரிசுத்த ஸ்தலமானது" வேறெந்தத் தட்டுமுட்டு பொருட்களும் வைக்கப்படாமல், நியாயப்பிரமாணக் திரப் பலியை செலுத்திய பொழுது உட்செல்லுவார். ஆசரிப்புக் கூடாரத் தைச் சுற்றிலும் இருந்த வெளிப்பிரகாரத்தில் தகன பலிபீடமும் கை கழுவும்

தொட்டியும் வைக்கப்பட்டிருந்தன. ஆசரிப்புக் கூடாரமானது வனாந்தரத்தில் அலைந்து திரிந்த போது அவர்களுடன் சுமந்து செல்லப்பட்டது, பின்பு சீலோவில் அமைக்கப்பட்டது, சாலொமோனின் ஆலயம் கட்டியெழுப்பப்படும் வரைக்கும் நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக அக்கூடாரம் அங்கேயே தொடர்ந்து இருந்தது.

***5. இனப் பலிகள்.***—பலிகள் என்பவை எபிரெய ஆராதனையின் மைய அம்சங்களாக இருந்தன. இவைகள் மிருகங்களாகவோ அல்லது பூமியின் முதற் பலன்களாகவோ இருந்திருக்கலாம். மிருக பலிகளில் மூன்று பிரிவுகள் இருந்தன:

*அ. தகன பலிகள்.*—இவைகள் தினமும் காலையிலும் மாலையிலும் செலுத்தப்பட்டன; இவை முற்றிலுமாகப் பட்சிக்க/எரியூட்டப்பட்டன மற்றும் இவை தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தலின் அடையாளப்படுத்துதலாயிருந்தன.

*ஆ. சமாதான பலிகள்.*—இவற்றின் ஒரு பகுதியானது இவற்றைச் செலுத்துபவர் தம் நண்பர்களை விருந்துக்கு அழைக்கும் நிகழ்ச்சிக்காக ஒதுக்கி வைக்கப்படுவது என்பது இப்பலிகளின் பண்பாக இருந்தது. இவை தேவனுடன் ஐக்கியம், தொடர்பு ஆகியவற்றை விளக்கப்படுத்துவனவாகவும் சில வேளைகளில் ஏராளமான எண்ணிக்கையில் செலுத்தப்படுவனவாகவும் இருந்தன.

*இ. பாவ நிவாரண பலிகள்.*—இவை தனிநபருக்குரியதாகவோ அல்லது இனத்திற்குரியதாகவோ இருந்திருக்கலாம். எந்த விஷயத்திலும், பலியானது ஒரே ஒரு மிருகத்தை மட்டுமே கொண்டிருந்தது. (அதன்) ஒரு பகுதியானது பீடத்தின் மீது தகனிக்கப்பட்டது; ஒரு பகுதியானது ஆசாரியரால் உண்ணப்பட்டிருக்கலாம், ஆனால் அவ்விறைச்சி சமைக்கப்பட்ட பாத்திரமானது உலோகத்தாலானதாக இருந்தால், (சமையல் முடிந்தபின்) தூய்மைப்படுத்தப்பட வேண்டும் அல்லது மண்ணால் ஆனதாக இருந்தால், உடைக்கப்பட வேண்டும். (அம்மிருகத்தின்) குடல்கள் முதலிய உறுப்புக்கள் பாளையத்திற்குப் புறம்பாகச் சுட்டெரிக்கப்பட வேண்டும். பாவ நிவாரண பலியின் சடங்கானது பாவத்தின் தீட்டான தன்மை பற்றிய பாடங்களை (யூதர்களின்) மனதில் பதியச் செய்யும் நோக்கங் கொண்டிருந்தது.

***6. இன ரீதியான விசுவாச விலக்கம்.***—இன உடன்படிக்கையின் முதல் மீறுதலானது சீனாய் மலையின் அடிவாரத்திலேயே நடந்தேறிற்று. (மலையின் மீதேறிச் சென்றதால்) மோசே அங்கு (மலையடிவாரத்தில்) இல்லாத நிலையில் மக்கள் தங்களுக்கு முன் செல்லும்படி தெய்வங்களை உண்டாக்க ஆவல் கொண்டார்கள். ஆரோன் (அதற்கு) இணங்கினார். எகிப்தில் கன்றுக்குட்டி ஆராதனை செய்தமை போல அவர் ஒரு பொன் கன்றுக்குட்டியை உருவாக்கினார், இஸ்ரவேலர்கள் விக்கிரகாராதனைப் பண்டிகையில் ஈடுபட்டார்கள். மோசே கற்பலகைகளுடன் (மலைமேலிருந்து இறங்கி) திரும்பி வந்தார். அவர்கள் உடன்படிக்கையை மீறியிருந்தபடியால், அவர் அந்த உடன்படிக்கை எழுதப்பட்டிருந்த கற்பலகைகளை உடைத்துப் போட்டார். அவருடைய வேண்டுதலினால் மக்கள் மீண்டும் (தேவனுடன்) இணைக்கப்பட்டனர், இருப்பினும், அவர்களின்

குற்றத்திற்குத் தண்டனையாக அவர்களில் மூவாயிரம் பேர் தண்டனை பெற்று (மரணமடைந்து) விழுந்தனர்; உடன்படிக்கையானது புதுப்பிக்கப் பட்டது மற்றும் புதுக் கற்பலகைகள் தயார் செய்யப்பட்டன.

## III. சீனாய் மலையிலிருந்து காதேஸ் வரைக்கும்.

***1. மக்கள் தொகை கணக்கிடுதல்.***—சீனாய் மலையிலிருந்து முகாமைப் பெயர்த்தெடுத்துப் பயணம் தொடரும் முன்பாக, இனங்களின் கணக் கெடுப்பு ஒன்று நடைபெற்றது. முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பின்பு அலைந்து திரிதல்களின் முடிவில் இரண்டாம் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த இரட்டைக் கணக்கெடுப்புதான் எண்ணாக மம் என்ற புத்தகத்திற்கு அப்பெயரைத் தருகின்றது.

***2. காதேஸுக்கு அணிவகுத்துச் செல்லுதல்.***—(எகிப்திலிருந்து) கடந்து வந்து ஓராண்டிற்குப் பின்பு, சீனாய் மலையிலிருந்து இஸ்ரவேலர்கள் கானானின் தென்முனையிலிருந்த காதேஸ் என்ற இடம் நோக்கி அணி வகுத்துச் சென்றனர். அந்தப் பாதையானது இளைப்படையச் செய்யும் பாலைவனமொன்றில் சென்றது. தபேரா என்ற இடத்தில் மக்கள் கசப்புடன் முறுமுறுத்துக் கலகம் செய்தபடியால் நெருப்பினால் பட்சிக்கப்பட்டார்கள். அணிவகுத்துச் செல்லுதலை மீண்டும் தொடரு முன்பாக, இஸ்ரவேலர் தங்களுடன் துணையாக இருந்த திரளான கூட்டத்தின் தூண்டுதலினால் மன்னாவை அருவருத்தனர், மற்றும் எகிப்தின் உணவுக்காக ஏங்கினர். ஏராளமான எண்ணிக்கையில் காடைகள் அனுப்பப்பட்டன; ஆனால் அவற்றுடன் திரள் கூட்டமான மக்கள் செத்தொழியும்படியான கொள்ளை நோயும் வந்து சேர்ந்தது, மற்றும் தபேரே (எரிதல்) என்ற முகாமானது கிப்ரோத் அத்தாவா (இச்சையின் கல்லறைகள்) என்று அறியப்படலாயிற்று. ஆரோனும் மிரியாமும் கலகம் செய்ததென்பது (அந்த) அணி வகுப்பின் இன்னொரு வேதனை மிக்க நிகழ்ச்சியாயிருந்தது. மிரியாம் தொழு நோயினால் பாதிக்கப்பட்டாள், ஆனால் மோசேயின் வேண்டுதலினால் குணப்பட்டாள்.

***3. விசுவாசத்தில் வீழ்ச்சி.***—(கானான்) நாட்டை ஆராய்ந்து வருவதற் காக காதேஸில் இருந்து பன்னிரண்டு வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் அந்நாட்டின் புகழ்ச்சி பற்றி ஒருமனதான கருத்துடனும், அதன் வளமைக்கு நிரூபணமாக இனிய கனிகளையும் சுமந்தவர்களாய் திரும்பி வந்தனர். ஆனால் காலேப், யோசுவா ஆகிய இருவரைத் தவிர மற்ற யாவரும் (அந்த நாட்டை) வெற்றி கொள்வது நம்பிக்கையற்றது என்று அறிக்கை தந்தனர். இனத்தின் விசுவாசமானது முற்றிலுமாக முறிந்து விழுந்தது. அவர்கள் (தங்களுக்கு) வேறொரு தலைவரைத் தேர்ந்து கொண்டு எகிப்து திரும்பும் திட்டத்தை முன் மொழிந்தனர். அவர்களை (இஸ்ரவேல் மக்களை) தைரிய மூட்ட முற்பட்ட காலேபும் யோசுவாவும் கல்லெறியப் படுதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினர். இதற்கு முன்பும்கூட அவர்களின் விசுவாசம் அடிக்கடி பலவீனமடைந்து, அலை பாய்ந்திருந்தது; (ஆனால்) இதற்கு முன்பு அவர்கள் ஒருக்காலும் வாக்குத்தத்தம் பண்ணப்

பட்ட நாட்டிற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பி, (தங்கள்) அடிமைத் தளையின் இல்லம் நோக்கி தங்கள் முகங்களைத் திருப்பியதில்லை. இது அவிசுவாசத்தின் உச்சகட்டமாயிருந்தது (எபி. 3:19). அந்தக் கீழ்ப்படியா மையுள்ள சந்ததியார் ஒருவர் பின் ஒருவராக மரித்து அவர்கள் யாவரின் எலும்புகளும் வனாந்தரத்தில் வெளுக்கப்படும் வரையிலும் முப்பத்தெட்டு ஆண்டுகள் அளவாக அங்கேயே அலைந்து திரியும் தண்டனை அவர் களுக்குக் கொடுக்கப்பட்டது. கானானுக்குள் நுழைவதற்கு (எகிப்திலிருந்து புறப்பட்டவர்களில்) காலேபும் யோசுவாவும் மட்டுமே உயிரோடிருந்தனர். இந்த முப்பத்தெட்டு ஆண்டுகள் ஏறக்குறைய ஒரு வெறுமையாகவே உள்ளன. ஓய்வுநாளை மீறிய ஒருவருக்கு தண்டனை, கோரா, தாத்தான் மற்றும் ஆபிராம் ஆகியோரின் கலகம் மற்றும் ஆரோனின் கோலைத் தளிர்க்கச் செய்ததினால் அவரது பிரதான ஆசாரியத்துவ அதிகாரம் உறுதிப்படுத்தப்படுதல் ஆகியவையே இந்தக் கால கட்டத்தின் நிகழ்ச்சி களாய் உள்ளன. இதன் முடிவில் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நிறைவாக முன்னேறிச் செல்வதற்காக மீண்டும் காதேசில் ஒன்று கூடினார்கள்.

## IV. காதேஸில் இருந்து யோர்தான் வரைக்கும்.

காதேசில் இரண்டாம் முறை சஞ்சரித்த பொழுது, மோசேயும் ஆரோனும் கன்மலையை இரண்டாம் முறையாக அடித்ததினால் பாவம் செய்கின்றனர், அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாதிருக்கின்றனர். இங்கு மிரியாம் மரிக்கிறாள். ஏசாவின் சந்ததியாரான ஏதோமியர்கள் தங்கள் எல்லைகளினூடாக (இஸ்ரவேலர்கள்) கடந்து செல்லுவதை மறுக்கின்றனர், மற்றும் (இதனால்) இஸ்ரவேலர் செங்கடலின் கவைப் பகுதியைத் தொட்டு தெற்கு நோக்கி நீண்ட பயணம் செல்லுகின்றனர். வழியில் ஆரோன் மரித்து ஓர் என்ற மலையில் அடக்கம் செய்யப்படுகின்றார். அவிசுவாசத்தின் ஒரு புதிய கிளர்ந்தெழுதலுக்குத் தண்டனையாகக் கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் அனுப்பப்படுகின்றன. குணமாக்குதலின் அடையாளமாக/அர்த்தமாக மற்றும் சிலுவையில் கிறிஸ்துவின் ஒரு (முன்) மாதிரியாக வெண்கல சர்ப்பம் ஒன்றை மோசே உயர்த்துகின்றார். இஸ்ரவேலர்கள் யோர்தானின் கிழக்குப் பகுதியில் இருந்த அமோரிய இனத்தின் வல்லமை நிறைந்த பிரதானிகளான ஓக் மற்றும் சீகோன் ஆகியோரை வெற்றி கொள்ளுகின்றனர். அவர்களின் நாட்டெல்லைகளில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத் தார் குடியமருகின்றனர். மோவாபிய அரசர், இஸ்ரவேலரின் வெற்றி மிக்க வளர்ச்சியால் எச்சரிக்கையடைந்து அவர்களை சபிப்பதற்காக பாலாம் (பிலேயாம்) என்ற பெயர் கொண்ட புகழ் பெற்ற தீர்க்கதரிசியைக் கைக் கூலி கொடுத்து நியமிக்கின்றார். அவரது (பிலேயாமின்) உதடுகளிலிருந்து புறப்பட்ட அவரது சாபங்கள் ஒவ்வொரு முறையும் ஆசீர்வாதங்களாகவே மாறுகின்றன. ஆனால் அவர் நேரடியாகத் தாம் நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருந்ததை மறைமுகமாய் நிறைவேற்றிக் கொள்ளுகின்றார். அவர் இஸ்ரவேலரை மோவாபிய மற்றும் மீதியானியப் பெண்களுடன் விபசாரம்

செய்யத் தூண்டி, அவர்களைப் பாவம் செய்ய வைக்கின்றார், அதன் தண்டனையாகத் தேவன் அனுப்பிய கொள்ளை நோயினால் ஆயிரக் கணக்கில் தேவனுடைய மக்கள் (இறந்து) விழுகின்றனர். ஆனால் கடைசியில், வெறுமையான பாலைவனங்கள், உக்கிரமான விரோதிகள், மற்றும் தங்களின் சொந்த அவிசுவாசம் ஆகியவை எல்லாம் இருந்தும் கூட, இஸ்ரவேலர்கள் அவைகளை வெற்றியுடன் கடந்து வந்து, யோர்தானுக்கு முன்பாக அதன் கிழக்குப்பகுதியில் முகாமிடுகின்றனர். மோசே தமது பிரியாவிடை உரையை நிகழ்த்துகின்றார், இது உபாகமத்தின் பெரும் பகுதியாக உள்ளது. சவக் கடலின் கீழக்குப் பகுதியில் பிஸ்காவின் கொடுமுடியில் இருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டின் வனப்புமிக்க காட்சியொன்று அவருக்கு அளிக்கப்படுகின்றது. அங்கு அவர் மரிக்கின்றார் மற்றும் அறியப்படாத கல்லறையொன்றில் அடக்கம் செய்யப்படுகின்றார். அவரது ஊழியம் செய்து முடிக்கப்பட்டிருந்தது. அவர் தமது மக்களை மீட்டிருந்தார், அடிமைகளாய் இருந்த இனமொன்றை ஒருங்கமைக்கப் பட்ட ஒரு இனமாக்கி, அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் வாசல்கள் வரைக்கும் வழிநடத்திச் சென்றார். அவர் தம் ஊழியத்தையும் உயிரையும் ஒருசேரக் கிடத்தினார்.

---

குறிப்பு

[1]மோசேயின் பாடல் மற்றும் பென்ட்டவுரின் கவிதை ஆகியவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடுகளுக்கு கிப்ஸன் அவர்களின் “Mosaic Era” என்று நூலில் காணவும்.